| Spl S.CNo. | 17/2022 (CC No.3/2018) | Deposition of | PW. 75 (LW. 308) |
|---|---|---|---|
| Name | Tr. A.Sivakumar | Date | 11.06.2026 |

**1 முதல் 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.**

**4 மற்றும் 5 எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் 12.22 P.M.**

CBCID க்கு தனி காவல் நிலைய அந்தஸ்து உள்ளதா என்றால் சரிதான். காவல் நிலைய அன்றாட நடவடிக்கைகளை குறிப்பிடுவதற்கு பொது நாட்குறிப்பேடு CBCID வசம் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 01.10.2016 CBCID SID ன் பொறுப்பு அதிகாரி யார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 01.10.2016 அன்று இந்த வழக்கை விசாரிப்பதற்கு எனக்கு எழுத்துமூலமான அதிகாரம் வழங்கப்பட்டதா என்றால் வழங்கப்பட்டது. எந்த அதிகாரியால் என்றைக்கு வழங்கப்பட்டது என்றால் வழக்கு நாட்குறிப்பேட்டை பார்த்து தான் சொல்ல முடியும், அது தற்போது என்வசம் இல்லை. CBCID SID ல் நான் பணிபுரிந்தபோது என்னுடைய குவிமுச 161 வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதா என்றால் திரு. ஆனந்த் ஆரோக்கியராஜ் (அ.த.சா 73), ஆய்வாளர் மற்றும் திரு. ஆனந்தகுமார் (அ.த.சா 74), துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்கள், ஆனால் வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்று தெரியாது. CBCID SID ல் நான் விசாரணை செய்தபோது எதிரிகளை குறித்து ஏதேனும் அறிக்கை அளித்தேனா என்றால் இல்லை. இறந்துபோன சசிக்குமாரின் முன்விரோதம் காரணமாக எதிரிகள் மற்றும் விரோதிகள் யார் என்று விசாரணை செய்து அறிக்கை அளித்தேனா

என்றால் இல்லை. CBCID SID ல் நான் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோது இந்த வழக்கில் எதிரிகள் நிர்ணயிக்கப்படவில்லை என்றால் CBCID SID நான் இந்த வழக்கில் பொறுப்பு எதுவும் ஏற்றுக்கொள்ளவில்லை, புலன் விசாரணை அதிகாரிகளுக்கு உதவியாக இருந்தேன், அப்போது எதிரிகள் யாரும் நிர்ணயிக்கப்படவில்லை. 20.02.2018ம் தேதி CBCID SID கோவையில் துணை காவல் கண்காணிப்பாளர் (அ.த.சா 74) என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றால் செய்துள்ளார். நான் அந்த வாக்குமூலத்தில் தனி அலுவலின்போது கோவை மாநகர பகுதியில் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் பற்றியும் இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சசிக்குமாருக்கு முன்விரோதம் ஏதேனும் உள்ளதா என்பது பற்றியும் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இந்த வழக்கு என்ஐஏவிற்கு மாற்றப்பட்டு நான் விசாரணை அதிகாரியாக பொறுப்பேற்ற பிறகு ஏற்கனவே புலனாய்வு செய்யப்பட்ட CBCID SID யின் கோப்புக்களை முழுமையாக பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். நான் 06.08.2021 அன்று 5ம் எதிரி ரஃபிகுல் ஹசன் என்பவர் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தபோது CBCID SID துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அளித்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். துடியலூர் காவல் நிலையத்தில் பெறப்பட்ட பிரேத விசாரணை அறிக்கை (அ.த.சா ஆ111) column 9 ல் இறந்துபோன சசிக்குமாரை

யார் கொலை செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் முன்விரோதம் காரணமாக யாரே வெட்டி கொலை செய்ததாக சொல்லியுள்ளார், ஆனால் குறிப்பிட்டு யாருடைய பெயரையும் சொல்லவில்லை. அ.த.சா 5 தனபாலிடமிருந்து கைபேசியை பெற்று நான் அதில் உள்ள தரவுகளை பதிவிறக்கம் செய்தேனா என்றால் பதிவிறக்கம் செய்து புகைபடங்களை பிரிண்ட் அவுட் எடுத்தேன். 20.02.2018 அன்று நான் அளித்த 161 குவிமுச வாக்குமூலத்தில் 01.10.2016ம் தேதி சாட்சி தனபால் என்பவரை விசாரிக்கும்போது அவர் அவரது செல்போனில் இருந்த சில புகைபடங்களை அலுவலக கணினி மற்றும் கலர் பிரிண்டர் மூலமாக பிரிண்ட் அவுட் எடுத்து 65B IEA ன் படி சான்று வழங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தனபாலின் கைபேசியின் விவரங்களை நான் 65B IEA ன் சான்றிதழில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.த.சா ஆ8 வரிசை இவ்வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையாக தனபாலின் கைபேசியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டிருந்தால் நான் அதனை அ.த.சா ஆ9ல் குறிப்பிட்டிருந்திருப்பேன் என்றாலும் நான் பதிவிறக்கம் செய்தவற்றை மறைத்து உருவாக்கப்பட்டது தான் அ.த.சா ஆ8 வரிசையில் உள்ள புகைபடங்கள் என்றால் சரியல்ல. நான் 06.08.2021ல் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையில் பட்டியல் சாட்சி 39 குமார் என்ற பொட்டு குமார் என்ற நடராஜ் என்பவரின் 03.10.2016 மற்றும் 02.03.2018 அன்று 161 குவிமுச வின் கீழான வாக்குமூலங்களை நான் பரிசீலனை செய்துதான் தாக்கல் செய்தேனா என்றால் பரிசீலனை செய்தேன்.

02.03.2018 அன்று பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தை பரிசீலனை செய்தபோது பட்டியல் சாட்சி 39 குமார் என்ற பொட்டு குமார் என்ற நடராஜ் என்பவர் சசிக்குமார் சம்பவ இடத்தில் வெட்டுப்பட்டு கிடந்ததை பார்த்தவுடன் துடியலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. கருப்புசாமி பாண்டியனிடம் தெரிவித்ததாக சொல்லியுள்ளார் என்றால் சொல்லியுள்ளதாக என் விசாரணையில் தெரிந்து கொண்டேன். புலன் கொள்ளக்கூடிய குற்றம் சம்மந்தமாக தொலைபேசியில் தகவல் கிடைத்தால் கூட அதை பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யும் வழக்கம் உள்ளது என்றால் அது கட்டாயம் இல்லை. சம்பவத்திற்கு பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பு RDO திரு. நாராயணசாமி, கிராம நிர்வாக அலுவலருக்கு (அ.த.சா 21) தகவல் தெரிவித்து அவரை உடனடியாக சம்பவ இடம் செல்லுமாறு பணித்து அப்போது அவர் சென்றபோது அங்கு போலிசாரும் வந்துவிட்டனர் என்ற விவரத்தை என் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் சரியல்ல அதிகாலை 3.15 மணிக்கு வந்ததாக திரு. நாராயணசாமி விசாரணை அதிகாரி சிறுமுகை காவல் நிலைய ஆய்வாளரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். 06.08.2021ல் தாக்கல் செய்த குற்றபத்திரிக்கையில் பட்டியல் சாட்சி 6 யமுனா மற்றும் பட்டியல் சாட்சி 8 ராதா, 161 குவிமுச வாக்குமூலத்தில் அதிகாலை 2 மணியளவில் போலிசார் சம்பவ இடம் வந்ததாக சொல்லியுள்ளதை நான் பரிசீலனை செய்தேனா என்றால் பரிசீலனை செய்தேன் (அரசு தரப்பு வழக்கறிஞர் 145 இந்திய சாட்சியல் சட்டம் விற்கு எதிரானது என்றும் மற்றும் செவி வழி சாட்சியம்

என்பதாலும் இந்த கேள்விக்கு ஆட்சேபம் தெரிவித்தார்). பட்டியல் சாட்சி 39 நடராஜன் மது அருந்திவிட்டு சம்பவ இடம் சென்ற விவரத்தை என் விசாரணையில் தெரிந்துக்கொண்டேனா என்றால் அவ்வாறு CBCID SID ஆய்வாளரிடம் வாக்குமூலம் அளித்துள்ளதை நான் பரிசீலனை செய்தேன்.

**<u>4 மற்றும் 5 எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்ட நேரம் 01.35 P.M.</u>**

**<u>ஒத்திவைக்கப்பட்ட 4 மற்றும் 5 எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் 3.30 P.M.</u>**

குமார் என்ற பொட்டு குமார் என்ற நடராஜ் சம்பவ இடத்திலிருந்து தன் வீட்டிற்கு சென்றுவிட்டு பின்னர் கெஜி மருத்துவமனைக்கு வந்துவிட்டு அங்கு சசிக்குமார் இறந்த விவரத்தை இந்து முன்னனி உறுப்பினர்களுக்கு தெரிவித்த விவரம் என்னுடைய விசாரணையில் தெரியவந்ததா என்றால் நடராஜ் அப்போதைய விசாரணை அதிகாரியிடம் தெரிவித்த வாக்குமூலத்திலிருந்து அவ்வாறு எனக்கு தெரிந்தது. குமார் என்ற பொட்டு குமார் என்ற நடராஜ் சுப்ரமணிய பாளையத்தில் இந்து முன்னனி பொறுப்பாளர் என்று நான் தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. நடராஜன் என்பவர் கொடுத்த புகைபடங்களை கணினியிலிருந்து பிரிண்ட் அவுட் எடுத்து 65பி சான்றிதழ் கொடுத்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன், அந்த புகைபடங்களை நடராஜன் நேரடியாக என்னிடம் கொடுத்தாரா என்றால் எனக்கு computer operate செய்ய தெரியும் என்பதால்

அப்போதைய விசாரணை அதிகாரி திரு. ஆனந்த் ஆரோக்கியராஜ் நடராஜ் என்பவரை என்னிடம் அழைத்து வந்து நடராஜ் செல்போனை என்னிடம் கொடுத்து அதில் நடராஜன் காட்டும் புகைபடங்களை பிரிண்ட் அவுட் எடுத்து கொடுக்க சொன்னதன் அடிப்படையில் நான் நடராஜன் காட்டிய புகைபடங்களை பிரிண்ட் அவுட் எடுத்து 65பி சான்றிதழ் (அ.த.சா ஆ282) வழங்கினேன். நான் CBCID விசாரணை அதிகாரிக்கு உதவியாக இருந்தபோதும் அதன் பின்பு என்ஐஏ வில் விசாரணை அதிகாரியாக இருந்தபோதும் நான் பாதுகாக்கப்பட்ட நான்கு சாட்சிகள் மற்றும் சாட்சிகள் தனபால், சக்கியா, ரோஷன், ஷாஜகான், குலாம் உசைன் ஆகியோரை மட்டும்தான் நான் விசாரித்தேன் என்றால் சரியல்ல, நான் மேற்சொன்னவர்களுக்கு மறுவாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் மற்றவர்களை விசாரித்துள்ளேன். 20.02.2018 அன்று துணை காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது 03.10.2016ம் தேதி குமார் என்ற பொட்டு குமார் என்ற நடராஜ் என்பவரது செல்போனில் இருந்த சில போட்டோக்களையும், 16.10.2016 தேதி தேனியை சேர்ந்த சசிக்குமார் என்பவரது சாட்சி விசாரணையின்போது அவர் முகநூலின் தான் போட்ட பதிவை தனது செல்போனில் screen shot எடுத்து வைத்திருந்தததையும் அலுவலக கணினி மற்றும் அலுவலக கலர் பிரிண்டர் மூலமாக பிரிண்ட் அவுட் எடுத்து 65B IEAன் படி சான்றாக விசாரணைக்கு உதவியாக விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திரு. ஆனந்த் ஆரோக்கியராஜ் அவர்களிடம் வழங்கினேன் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அ.த.சா ஆ282 65B IEAன் சான்றிதழில்

செல்போன் IMEI Number, Mobile number ஆகியவை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கைபேசியிலிருந்து புகைபடங்களை பிரிண்ட் அவுட் எடுக்கும்போது பொதுவாக அந்த புகைபடங்களில் எடுத்த தேதியும் நேரமும் பதிவாகும் என்றால் பிரிண்ட் அவுட்டில் பதிவாகாது. அ.த.சா ஆ282 உள்ள புகைபடங்களில் அது எடுக்கப்பட்ட தேதியும் நேரமும் இல்லை என்றால் சரிதான். Android cellphone ல் இருந்து புகைபடங்கள் எடுத்தால் properties என்ற பகுதியில் தேதியும் நேரமும் கோப்பின் அளவும் வரும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். குமார் என்ற பொட்டு குமார் என்ற நடராஜ் என்பவரை விசாரித்த பின்னர் தான் அவர் செல்போனில் இருந்து மேற்படி புகைபடங்களை பிரிண்ட் அவுட் எடுத்தேனா என்றால் அந்த நேரத்தில் அவரை விசாரிக்கவில்லை. 20.02.2018 அன்று துணை காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது குமார் என்ற பொட்டு குமார் என்ற நடராஜ் என்பவரின் கைபேசியின் எண் மற்றும் கம்பெனியின் பெயர் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கிற்காக உண்மைகளை மறைத்து நான் ஆவணங்களை தயார் செய்ததால்தான் அவ்வாறு ஞாபகமில்லை என்று திரித்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. சசிக்குமாரின் இறப்பிற்கு பிறகு இந்து முன்னனி மற்றும் RSS உறுப்பினர்கள் சிறுபான்மை மக்களின் வீடு கடைகள் வாகனங்கள் மற்றும் காவல்துறை வாகனங்களை உடைத்ததாக கோவையை சுற்றி இந்து முன்னனி மற்றும் RSS உறுப்பினர்கள் மீது 294 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்றால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன, ஆனால் இந்து முன்னனி மற்றும் RSS

உறுப்பினர்கள் மீது பதிவு செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியாது. இந்து முன்னனி மற்றும் RSS உறுப்பினர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட விவரம் நான் CBCID SID and NIA வில் இவ்வழக்கில் உதவி விசாரணை அதிகாரியாகவும் விசாரணை அதிகாரியாகவும் இருந்ததால் எனக்கு தெரியும் என்றாலும் அதை ஒப்புக்கொண்டால் இந்த வழக்கு ஜோடிக்கப்பட்ட வழக்கு என்று தெரிந்துவிடும் என்பதால் நான் உண்மையை மறைத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. சங்கனூர் கொடிகம்பம் பிரச்சினையும் ஹக்கிம் கொலையும்தான் சசிக்குமாரின் கொலைக்கு முக்கிய காரணம் என்று நான் என் விசாரணையின் மூலம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன், மேலும் சங்கனூர் கொடிகம்பம் பிரச்சினையும் சசிக்குமாரின் இந்து முன்னனி செயல்பாடுகளும் காரணம் என்பதை தெரிந்து கொண்டேன், ஹக்கிம் கொலைக்கும் சசிக்குமாரின் கொலைக்கும் சம்மந்தமில்லை. இவ்வழக்கில் ரோஷன் (அ.த.சா 35) என்பவரை 26.04.2021 அன்று விசாரித்துள்ளேன் என்றால் விசாரித்துள்ளேன். சங்கனூர் கொடிகம்பம் பிரச்சினை போலிசாரால் இருதரப்பினருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தி சமரசமாக முடிக்கப்பட்டது என்ற விவரத்தை நான் தெரிந்துகொண்டேனா என்றால் ரோஷன் அவ்வாறு வாக்குமூலம் அளித்துள்ளார். சங்கனூர் கொடிகம்பம் பிரச்சினை சம்மந்தமாக ஏதேனும் புகார் அளிக்கப்பட்டு மனு ரசீது வழங்கப்பட்டதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கின் விசாரணையின் போது அந்த மனு ரசீதை பெற்று இந்த வழக்கில் தாக்கல்

செய்யவில்லை என்றால் செய்யவில்லை, ஆனால் த.கா 1542 திரு. பழனிசாமி (அ.த.சா 44) சிறப்பு பிரிவு, துடியலூர் காவல் நிலையம், கோவை மாவட்டம் அவர் மேற்படி நிகழ்வு தொடர்பாக 26.09.2015 அன்று தாக்கல் செய்த தனி அறிக்கையை குற்றப்பத்திரிக்கையுடன் இணைத்துள்ளேன். அ.த.சா ஆ159ல் சசிக்குமாரை பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். அ.த.சா ஆ159 எதிரிகளை பற்றியும் எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்காக வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட முன் விரோதங்கள்தான் ஹக்கிம் கொலை மற்றும் சங்கனூர் கொடிகம்ப பிரச்சினை என்றால் சரியல்ல. தலைமை பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர், சென்னை அவர்கள் 5ம் எதிரியின் அடையாள அணிவகுப்பு 15வது குற்றவியல் நீதித்துறை நடுவர், சென்னை அவர்கள் சேலத்தில்தான் நடத்தவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரிதான், அந்த ஆவணம் **Ex. C11.** பாதுகாக்கப்பட்ட சாட்சிகளின் அழைப்பாணை சென்னையில் ஆஜராகும்படி உத்தரவிடப்பட்டதால் சென்னை புழல் மத்திய சிறையில் ஆஜர்படுத்தப்பட்டனர். 5ம் எதிரி ரஃபிகுல் ஹசன் சேலம் சிறைசாலையில் 24.02.2021 காலகட்டத்தில் இருந்தார் என்றாலும் பாதுகாக்கப்பட்ட சாட்சிகள் கோயம்புத்தூரில் இருந்தார்கள் என்றாலும் சரிதான். கோவையிலிருந்து சென்னைக்கு வருவதானால் 496 கி.மீ தூரம் பயணம் செய்யவேண்டும் என்றால் சரிதான். சேலத்திலிருந்து சென்னைக்கு வருவதானால் சுமார் 400 கி.மீ தூரம் பயணம் செய்யவேண்டும் என்றால் சரிதான். தலைமை பெருநகர

குற்றவியல் நீதித்துறை நடுவா் அவா்கள் உத்தரவை மீறி என்ஐஏ அதிகாரிகள் 15வது பெருநகர நீதித்துறை நடுவரை கட்டாயப்படுத்தி சென்னையில் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது என்றால் சரியல்ல. அடையாள அணிவகுப்பு நடைமுறையில்,

" Hon'ble Chief Metropolitan Magistrate, by proceedings in ROC No.206/2021/D Dated 24.02.2021 nominated the 15th Metropolitan Magistrate, George Town to conduct the TI parade. The said proceedings were received by me on the same day. Though, It is mentioned that the TI parade would be conducted at central prison,Salem, were the accused has been lodged, the personnel of NIA, informed that the accused will be brought to central prison, Puzhal, Chennai and the witnesses also will be coming to Chennai. Hence, I decided to conduct the TI parade at central prison, Puzhal, Chennai"

என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், அந்த ஆவணம் **Ex. C12**. அடையாள அணிவகுப்பிற்கு நான்தான் சாட்சிகளை அழைத்து வந்து நீதித்துறை நடுவருக்கு அடையாளம் காண்பித்தபிறகு நான் சிறைசாலையிலிருந்து வெளியில் செல்லும்படி நீதித்துறை நடுவரால் பணிக்கப்பட்டேன் என்றால் சரியல்ல, சாட்சிகளை நான் அழைத்துவரவில்லை பாதுகாக்கப்பட்ட சாட்சிகளை நீதித்துறை நடுவரிடம் அவா்கள் பாதுகாக்கப்பட்ட சாட்சிகள் என்று அடையாளம் காட்டினேன், பின்பு நடுவா் என்னை வெளியே இருக்கும்படி தெரிவித்தாா் நான் வெளியே சென்றுவிட்டேன். சேலம் சிறையிலிருந்து சென்னைக்கு 5ம் எதிரி ரஃபிகுல் ஹசன் அழைத்துவரப்பட்டபோது

6 இடங்களில் பல்வேறு காரணத்திற்காக வாகனத்தில் இருந்து இறக்கி ஏற்றப்பட்டார் என்றாலும் பாதுகாக்கப்பட்ட சாட்சிகளுக்கு அவர் அடையாளம் காட்டப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. 5ம் எதிரி ரஃபிகுல் ஹசன் புகைபடத்தில் பாதுகாக்கப்பட்ட சாட்சிகளுக்கு அடையாளம் காட்டப்பட்டதோடு நேரடியாக அடையாளம் காட்டவேண்டும் என்ற நோக்கத்தில் தான் சேலத்தில் அடையாள அணிவகுப்பு நடத்த வேண்டும் என்ற பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர் உத்தரவு இருந்தும் நாங்கள் சென்னையில் அடையாள அணிவகுப்பு நடத்தினோம் என்றால் சரியல்ல. உண்மையான எதிரிகளை மறைத்து இந்த வழக்கின் எதிரிகளை சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் CBCID SID போலிசாரும் என்ஐஏ போலிசாரும் இந்த வழக்கை ஜோடித்துள்ளோம் என்றால் சரியல்ல. ஆவணங்களும் வாக்குமூலங்களும் இந்த வழக்கிற்காக போலியாக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன தேதியில் ஆவணங்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. ஒப்புக்கொள்ளப்பட்ட சட்டவிதிகளுக்கு மாறாக இவ்வழக்கு என்ஐஏவால் புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 5ம் எதிரி ரஃபிகுல் ஹசன் வெளிநாட்டிற்கு தப்பி செல்லவில்லை என்றாலும் தமிழ்நாட்டில் வியாபாரம் சரியில்லை என்பதால் தன் குடும்பத்தோடு பிழைப்பிற்காக வெளிநாடு சென்றார் என்றால் சரியல்ல. ஒன்றிய அரசு Demonetisation Policy னால் ஏற்பட்ட வியாபார சரிவின் காரணமாக 5ம் எதிரி ரஃபிகுல் ஹசன் குடும்பத்துடன் வெளிநாடு சென்றார் என்றால் சரியல்ல. நான்

முறையாக புலன் விசாரணை செய்யாமல் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**4 மற்றும் 5 எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை முடிவடைந்த நேரம் 5.35 P.M.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

SUBRAMANIAN MALARVIZHI

Digitally signed by SUBRAMANIAN MALARVIZHI
Date: 2026.06.11 17:58:16 +0530

District and Sessions Judge.
Special Court under the National Investigation Agency Act, 2008,
Chennai @ Poonamallee.